IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# மத்தளமும், சிலப்பதிகாரச் சான்றும்

**G. கமலகண்ணன்**
முனைவர் பட்ட ஆய்வாளர், (பகுதி நேரம்), இசைத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**முன்னுரை**

இந்த ஆய்வில், மத்தளம் மற்றும் தாள இசைக்கருவிகளின் தோற்றத்தையும் சிலப்பதிகார சான்றுகள் மூலமாக அறிய முடிகின்றது. தாள வாத்தியங்களின் பாட நிலையை கடவுள்களிடமிருந்து உருவான விதத்தினை எடுத்துரைக்கின்றது. மேலும் சங்கீதத்திற்கும் தாளக்கருவிகளுக்கும் நடனத்திற்கும் உள்ள தொடர்பினையையும், இதன் ஆசிரியர்களுக்கான இலக்கணங்களையும் சிலப்பதிகார சான்றுகள் மூலமாக அறிய முடிகின்றது.

**மத்தள அமைப்பு**

மத்தளம் அமைப்பில் மரத்தால் (உடல்) நடுவுயர்ந்து தவறாத இடது பக்க, வலது பக்க அமைப்புகள் அமைந்ததாலும், வாய்களில் மடிதோல், உட்காரத்தோல் போன்ற பல்வகைத்தோல் அமைப்புகளினாலும் நீண்ட பதினாறு வார்களினால் பிணைக்கப்படுவதாலும் தனித்த கொட்டுக்கருவியாக வளர்ந்துள்ளது என்பது புலனாகும்.

சிலப்பதிகாரத்தில் தண்ணுமை தலைமைக்கருவியாக நின்று உதவியது. இக்காலத்து உடனியைந்ததாக மத்தளமும் உத்தமக் கருவியாகவும், தலைமைக் கருவியாகவும் வளர்ச்சி பெற்றிருப்பது காணலாம். சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் உரையில் மத்தளம் கருவி இடம்பெறுவது பின்வரும் செய்திகளால் அறியலாகும்.

(1) சிலப் - மங்கல வாழ்த்துப்பாடல் - 46
முரசியம்பின் முருடதிர்ந்தன”

இங்கு முருடு என்பது மத்தளம் ஆகும்.

(2) சிலப் - 3, அரங்கேற்று காதை - 27

தண்ணுமைக்கருவி முதலியவற்றுள் மத்தளம் ஒன்று, இது அகமுழவு வகையைச் சார்ந்தது. மத்து + தளம் = மத்தளம். மத்து என்பது ஒலியை உருவாக்கும் ஓசைப்பெயர். இசைக்குரியவனாகிய கருவிகட்கெல்லாம் தளமாக அமைவதால் மத்தளம் எனப் பெயர் பெற்றது.

(3) சிலப் - 3, அரங்கேற்று காதை - 140, 141

"தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே"

யாழ்பாடலின் வழியே அதற்குத்தக்கவாறு தண்ணுமையாகிய மத்தளம் நின்றதென்பதும், இம்மத்தளக் கருவியின் வழியே "குடமுழா நின்றது என்றவாறும்,

(4) சிலப் - 14, ஊர்காண் காதை - 151

"கூடிய குயிலுவக் கருவியுமுண்ரந்து"

நால்வகை உத்தமப் பெரும் தோற்கருவிகளான மத்தளம், தண்ணுமை, இடக்கை, சல்லிகை என்பன.

சங்கீதத்திற்கும். மத்தளக் கருவிக்கும் உள்ள தொடர்பு பற்றிக் கோகள முனிவர் பின்வருமாறு கூறுவர். "இறைவன் காளியுடன் தாண்டவமாடிய வேளையில் அவருடைய பாதச்சிலம்பு கழன்று மேலெழுந்து பின் கீழ்நோக்கி வந்து, இறைவனின் தோள், தொடை, பாதம் என்னும் அங்கங்களில் பட்டு கீழே விழுந்தது. அந்நேரத்தில் உண்டாக்கிய ஓசை த - தி - தொம் - நம் என்னும் சொற்கட்டுக்களாயின. ஒலி எழுந்த சொற்கட்டுக்களை மத்தளத்தில் வாசிக்கும் போது பிறந்த நாதம் ஏழு கரங்களின் நாதமாகக் கருதப்பட்டது" என்பதாகும்.

**நடன மத்தளச் சான்றுகள்**

இவ்வாறு ஒலி பொருந்திய த தி தொம் நம் என்னும் சொற்றொடரை இறையில் கருத்துத் தொடராக, இறைமையாகிய மத்தளம் எனச் சுட்டும் பாடலடிகளால் மத்தளவியலாளர் கூறுவதைக் காணலாம்.

"தத்தித்தோ ன்னமென்னுஞ் சத்தத்தின் வகையேது
தாந்தோ மென்றெழுந்த ஓசைதனக் கொழிவேது
ஒலிதனக் குருவமேது சக்தி "சிவம் ஒன்றிலங்குந்
தலமேது வலமேது தனாமேது
மத்தளமென் றெடுத்தற்கு வகையேது
தொகையேது வகுத்துப்பாரே"

(பாடல் - 9)

இப்பாடல் சுட்டும் பொருள் இறைவனுக்கு வடிவுமில்லை, மத்தள ஒலிக்குமில்லை. மத்தளத்தின் ஒரு பக்கமாகச் சிவனும், மற்றொரு பக்கமாகச் சக்தியுமுள்ளனர். ஏங்கும் நின்றி லங்கும் இறைக்கு வாழும் தலம் என்பதொன்றில்லை. உருவம் இல்லா இறைவன் உரவம் கொண்டுள்ளான். இறைமை எங்கும் பரந்துபட்டுள்ளது. அந்த இறைமை போல மத்தள மழக்கின் வகைகள் பரந்து விரிந்துள்ளன. அவற்றின் வகைகளைக் கணக்கிட முடியாது. இறைவன் ஓர் எல்லைக்குள் அடங்கான், இது போன்றே மத்தள முழக்குகள் ஒரு வகைக்குள் தொகைக்குள் அடங்கா. தத்தித்தோன்மை என்னும் அடிப்படை ஓசைகளினின்றும் எழும் முழக்கு வகைகள் பலப்பலவாகும். "தாம் தோம்" என்பன எழுத்து உலகில் எங்கும் தொடர்ந்து மூலமாய் நிற்கும் இறை ஒலிகட்கு முடிவேது வடிவேது!

மேலும் இறையியல் கருத்துத் தொடராக மத்தளம் கருவிபற்றி "மத்தள மாட்சி" எனச் சுட்டும் பாடலடிகளால் மத்தளவியலாளர் சிறப்புறக் கூறுவதைக் காணலாம்.

"மத்தள மொன்றுண்டு தாளமு ரண்டுண்டு
மத்தளங் கொட்ட வகையறி வாரில்லை
மத்தறங் கொட்ட வகையறி வாளாகும்
மத்தளங் கொட்டி மகிழ்ந்தாடினானே
அத்தி னிருப்பிட மவ்விடந்தானே"

(பாடல் - 1)

இப்பாடல் சுட்டும் பொருள் மத்தளம் ஒரு சிறந்த இசைக்கருவி, அதில் முழக்கப்படும் தாளம் இரண்டு வகைப்படும். மத்தள முழக்கப்படும் தாளம் இரண்டு வகைப்படும். மத்தள முழக்குகள் மிக நுணுக்கமானவை, அவை கணக்கிலடங்கா வகையின. எனவே மத்தளக் கலையை முற்ற மடிய அறிந்தவர் எவருமில்லை. சிவனிடம் உமையாள் மத்தளம் கொட்டக் கற்றுக்கொண்டாள். உமையாள் மத்தளம் கொட்டி முழக்கச் சிவன் மகிழ்ந்து நடனம் ஆடினான், சிவனுடைய இருப்பிடம் மத்தளமே என்று இந்நூலாசிரியர் கூறுகின்றார்.

**மத்தள தெய்வம்**

மத்தளம் கொட்டி என்று சிவனைக் குறிப்பிடுவர். சிவன் தான் ஆடிய கொடுகொட்டி ஆட்டத்தில் தானே மத்தளக் கருவியை இசைத்தமையால் அவனுக்கு அப்பெயர் வழங்கலாயிற்று. இவ்விதம் இறையியல் ரீதியாக, அருமைக்குரியதாகக் கருதப்படும் மத்தளக் கருவியின் தொனிலக்ஷணச் சிறப்பை மகாபரத சூடாமணி எனும் நூல் பாடலடிகளால் சுட்டுவதைக் காணலாம்.

"தந்தித் தான்னந் திமிகிகி தாதா
தாத்திமி ககிதா தாவெனுஞ் சொல்லை
மத்தள வாத்திய மாகுமென்றே
சுத்தமா நுலிற் செல்லுமாதே"

(பாடல் - 854)

முதலாம் ஆதித்தியன் காலத்துக் கல்வெட்டில் மத்தளம் கருவி பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளதைக் காணலாம். தஞ்சை தில்லை ஸ்தானம் கிரிதஸ்தானேஸ்வரர் கோயில் கல்வெட்டில் "கண்டை, தளாம், கரடிகை, திமிலை" எனும் கருவிகளோடு மத்தளக் கருவியையும் குறிப்பிடுவதாகும்.

"மத்தளம் எட்டும், தாளம் ஒன்றும், கரடிகையொன்றும், கண்டையாறும், திமிலையொன்றும்" என அமைந்துள்ளது.

முதலாம் இராசராசன் காலத்துக் கல்வெட்டில் மத்தளம் பற்றிய குறிப்புடன் வேறு பலவும் இடம் பெறுவதைப் பின்வரும் பாடல் சுட்டுவதைக்கொண்டு அறியலாம். இது திருவையாறு பஞ்சநதீஸ்வரர் கோயிலில் உள்ளது.

"செம்பின் மேல் பொன்கடுக்கின் பாவைக் கண்ணாடியில்
ஆடுகிற பாவை ஒன்று மத்தளம் கொட்டுகிற பாவை ஒன்று
உடுக்கை வாசிக்கிற பாவை ஒன்று பாடுகின்ற பாவை ஒன்று
பீடமொன்று உட்படக் கண்ணாடியொன்று நிறை பொன்பதின்
பலம்".

என்பதாகும்.

**மத்தளம வாசிப்போர்**

மேலும் மத்தளக்காரர்கள், முட்டுக்காரர்கள் என்னும் குறிப்பும் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளதை அறியலாம்.

சிவகாஞ்சியில் திருவேகம்பர் ஆலயத்தில் மூர்த்தங் கொண்டருளும் இலிங்கத்திற்கு "மத்தள மாதவன்" என்று பெயர், இசைக்கு ஆதாரமாகச் சிவனை மத்தள மாதவன் என்ற பெயருடன் இலிங்கவுருவமாகக் கோயில் கொண்டிருக்கின்றனர். அவையேயன்றித் தென்னிந்தியாவில் ஆங்காங்கு விளங்கும் சிவாலயங்களில் சிற்சபாநாதன் திருக்கூத்தாடுவது போலவும், திருமால் மத்தளம் கொட்டுவது போலவும், பிரம்மன் கைத்தாளம் தட்டுவது போலவுமுள்ள திருவுருங்கள் சித்திரக்கப்பட்டுள்ளமை மேற்கூறியவற்றைக் காட்சிப்படுத்துவனாக அமைகிறது.

இதனையே சீர்காழி முத்துத்தாண்டவர் தமது கீர்த்தனையில்

"மால்கை மத்தளம் தணாதணாவென
மலரவன் தாளம் கணீர் கணீரென"

என்றும்,

“சதுர்முகன் இசைக்கொத்தங் கருகில் தாளந்தட்ட

ஜதையறிந்து அயன்றாதை தூக்கி மத்தளங் கொட்ட”

என்றும் குறிப்படுதல் மனங்கொளற்பாலது.

பலவகையான தோற்கருவிகள் பற்றிய செய்திகள் பழந்தமிழ் இலக்கியங்களில் இருக்கின்றன. அவற்றுள்ளே படிப்படியாக மாற்றம் அதிகப்படியாகப் பேசப்பட்டவை முழவு, தண்ணுமை, மத்தளம், மிருதங்கம் எனும் தோற்கருவிகளாகும்.

“மடிதோல்” என்னும் அமைப்புமுறை முதற்கண் தண்ணுமைக் கருவியிலிருந்து தோன்றியது. இந்த மடிதோல் அமைப்பு படிப்படியாக மீட்டு, சாப்பு என்னும் ஒலி வகையில் மத்தளக் கருவியினூடு முன்னேறியது.

**முடிவுரை**

சிலப்பதிகாரத்தில் தண்ணுமை தலைமைக் கருவியாக நின்று உதவியது. இக்காலத்துடனியைந்தாக மத்தளமும் உத்தமக் கருவியாகவும், தலைமைக் கருவியாகவும் வளர்ச்சி பெற்றிருப்பது காணலாம். மத்தளம் கருவியினின்றும் வளர்ச்சி பெற்றுத் தலைமைக் கருவியாகப் பெருவழக்கில் இருந்துகொண்டிருப்பது மிருதங்கக் கருவியாகும். இவ்வாறு மரபு வழி, நடனமும், நடனக் கலையும், நடனக் கலைஞர்கள் பற்றியும் பல்வேறு சங்ககால இலக்கியங்கள் வாயிலாக அறியப்பெறுகிறோம். பரத மரபும், மிருதங்க வாத்யத்தின் மரபும் பன்னெடுங்கால பழமையை பறை சாற்றி நிற்கின்றது.

**துணைநூல் பட்டியல்**


1. முனைவர். ஞானா குலேந்திரன், பழந்தமிழா் ஆடலில் இசை, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்-1990.
2. ரா. விசுவநாதையர், மகாபாரத சூடாமணி, அபிநய தற்பண - விலாசம் - 1955.
3. லீலாம்பிகை, “நடன சாரம்”, இலங்கை - 2002.